**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 29.3.2017



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உணவு அறிவியல் மற்றும் உணவக மேலாண்மைத் துறையின் சார்பில் (Institute of Catering Science and Hotel Management) “இல்லத்தரசிகளுக்கான செட்டிநாடு உணவு தயாரித்தல் குறித்த குறுகிய காலச் செய்முறைப் பயிற்சி வகுப்புகள்” 20.3.2017 முதல் 24.3.2017 வரை நடைபெற்றது.

20.3.2017 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார். அவர் தமது உரையில், செட்டிநாடு உணவு வகைகளின் சிறப்புகள் பற்றியும், செட்டிநாடு கலாச்சாரத்திற்கும், செட்டிநாடு உணவு வகைகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், உலகளவில் செட்டிநாடு உணவு வகைகள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலாண்மைப் புல முதன்மையர் முனைவர் வெ. மாணிக்கவாசகம் தொடக்கவுரையாற்றினார். ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் அ. நாராயணமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்ற செய்முறைப் பயிற்சியில் செட்டிநாடு உணவு வகைகளின் தயாரிப்பு பயிற்சினை துறையின் ஆசிரியர்கள் திரு. ஜி. சுரேஷ்குமார் மற்றும் திரு. வி. ராமச்சந்திரன் அளித்தனர். மேலும், சமையல் கலை வல்லுநர் நெடுங்குடி திரு. மணிகண்டன் மற்றும் அவர்களின் குழுவினர்கள் இல்லத்தரசிகளுக்கு செட்டிநாடு உணவு வகைகள் தயாரிப்பு குறித்த சிறப்பு பயிற்சி அளித்தனர்.

மேலும், காரைக்குடி செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் பயிலும் தாய்லாந்து நாட்டைச் சார்ந்த கிட்டிபான் சாய்வே, மற்றும் இத்தாலி நாட்டைச் சார்ந்த ராபர்டா பொர்னாரினோ ஆகிய வெளிநாட்டு மாணவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தில் செட்டிநாடு உணவு வகை தயாரிப்பு பயிற்சி நடைபெறுவது பற்றி அறிந்து, அந்த செய்முறைப் பயிற்சியினை நேரில் பார்வையிட்டு, சமையல் வல்லுநர்களிடம் கலந்துரையாடி உணவு தயாரிக்கும் முறையினை அறிந்து கொண்டனர்.

இறுதி நாளன்று இப்பயிற்சியில் பங்கு பெற்ற இல்லத்தரசிகளுக்கு நன்கு தெரிந்த உணவு வகைகளை தயாரிக்கும் போட்டி நடைபெற்றது. இல்லத்தரசிகள் அனைவரும் 4 குழுவாக பிரிக்கப்பட்டு இப்போட்டி நடத்தப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்ககத்தைச் சார்ந்த ஆறு உதவி பேராசிரியர்கள் நடுவர்களாக இருந்து, சிறந்த அணியை தேர்வு செய்தனர்.

24.3.2017 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில், அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன் தலைமையுரையாற்றினார். பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் கே. குருநாதன் சிறப்புரையாற்றினார்.

செய்முறை பயிற்சியில் கலந்து கொண்ட இல்லத்தரசிகளுக்கு பல்கலைக்கழகப் பதிவாளர் சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினார். நெடுங்குடி திரு. மணிகண்டன் செய்முறை பயிற்சியில் கலந்து கொண்ட இல்லத்தரசிகளை பாராட்டி வெள்ளி நாணயத்தினை பரிசாக அளித்தார்.

முன்னதாக, உணவு அறிவியல் மற்றும் உணவக மேலாண்மைத் துறைத் தலைவர் முனைவர் ஆர். கணபதி அனைவரையும் வரவேற்றார். உதவிப் பேராசிரியர் திரு. கே.பி. கார்த்திலிங்கம் நன்றி கூறினார்.

பேரா. வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)